KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.24

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தமிழ் இலக்கியங்களில் பனையின் சூழலியல் மதிப்பு

The Ecological Value of the Palmyra Palm in Tamil Literature

முனைவர் சு. நாகரெத்தினம்[1,*]

[1] உதவிப் பேராசிரியர் & தலைவர், தமிழாய்வுத் துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது திருச்சிராப்பள்ளி - 620002.

***Corresponding author:** முனைவர் சு. நாகரெத்தினம், nagarathinam@sigc.edu

ORCID iD: முனைவர் சு. நாகரெத்தினம் https://orcid.org/0009-0000-6455-3905

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 15 October 2026
Accepted: 28 October 2026

Article ID
KIJTS-2026-0019

Peer review
Double-blind peer review

Keywords
சூழலியல்
பனைமரம்
போந்தை
நுங்கு
நஞ்சு முறி
மண்ணரிப்பு

ABSTRACT

The Palmyra palm (Borassus flabellifer) holds a distinctive place among the trees closely bound to Tamil land, culture, and life. This article examines its ecological value through references in the Tolkāppiyam, Puṟanāṉūṟu, Paṭṭiṉappālai, Puṟapporuḷ Veṇpāmālai, and the Tirukkuṟaḷ, as well as in S. Venkatesan's novel Veerayuga Nāyagan Vēḷ Pāri. It first discusses the tree's many Tamil names, the palm-leaf manuscript tradition that preserved Tamil literature, and its role as the emblematic flower of the Cheras and the clan symbol of Pāri. It then considers the Palmyra palm as a source of food, including nungu (tender fruit), padhaneer (sap), karuppatti (palm jaggery), and toddy, and as a source of traditional medicine, drawing on the sap, tuber, and flower, with support from modern scientific studies. The ecological contributions of the tree are also analysed: soil conservation, groundwater protection, drought resistance, carbon sequestration, and biodiversity conservation. The study concludes that the Palmyra palm is not only a valuable natural resource but also an ecological guardian that reflects the environmental wisdom of Tamil society, underscoring the need for its conservation and sustainable use.

How to cite this article: முனைவர் சு. நாகரெத்தினம் (2026). தமிழ் இலக்கியங்களில் பனையின் சூழலியல் மதிப்பு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 325–335. https://doi.org/10.63300/kijts603112026.25
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியங்களில் இயற்கையும் மனித வாழ்வும் பிரிக்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளாகப் பிரித்து, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இயற்கைச் சூழலையும் உயிரினங்களையும் பதிவு செய்துள்ளன. அவ்வகையில் பனைமரமும் தமிழரின் நிலவாழ்வோடு இணைந்த இயற்கைக் கூறாக

இலக்கியங்களில் இடம்பெறுகிறது. குறிப்பாகப் பாலை நிலத்தின் வறட்சியையும், அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைச் சூழலையும் சித்தரிக்கும் போது பனைமரம் முக்கியமான இயற்கைப் பின்னணியாக விளங்குகிறது.

தமிழர் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் நெருங்கிய தொடர்புடைய மரங்களில் பனைமரம் தனிச்சிறப்புடையது. பனைமரம் ஒரு சாதாரண மரமாக மட்டுமல்லாமல் தமிழர்களின் பொருளாதாரம், உணவு, தொழில், பண்பாடு, இலக்கியம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, வறண்ட நிலப்பகுதிகளிலும் கடுமையான வெப்பத்திலும் வளரக்கூடிய பனைமரம், சூழலியல் சமநிலையைப் பாதுகாக்கும் இயற்கையின் அற்புதப் படைப்பாக விளங்குகிறது. இந்த மரம் இயற்கையின் காவலனாக விளங்குவதை இலக்கியங்களின் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

திறவுச் சொற்கள் : சூழலியல், பனைமரம், போந்தை, நுங்கு, நஞ்சு முறி, மண்ணரிப்பு

1. பனை - அறிமுகம்

பனைமரம் தமிழகத்தின் ஆதி மரம். காலத்தால் பழமையானது என்பதன் காரணமாக இதற்குப் பலப்பல பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. "பெண்ணை", "தாலம்", "தாளி", "போந்து", "போந்தை", "நீலம்", "கருந்தாள்", "கரும்புறம்", "ஓடகம்", "கருவிராகன்" என்பன பனையின் வேறு பெயர்கள். இதில் "போந்தை" என்பது இளம் பனை மரத்தைச் சுட்டும். இவ்வாறு பருவத்தின் அடிப்படையில் பெயர் இருப்பது தமிழுக்கே உரிய சிறந்த மரபு. பனையின் இலை, "ஓலை' எனப்பட்டது. பசுமையான ஓலை "சாரோலை' என்றும், காய்ந்த ஓலை "காவோலை' என்றும் அழைக்கப்பட்டது. பனை ஓலையின் ஒரு பகுதி "இலக்கு' என்று பேச்சுவழக்கில் இருந்தது. பனம்பூ மாலை, "பனம் புடையல்' என்றும் பனங்காயின் மேல்தோல், "பனை முகிழ்', "பனையிதக்கை' எனவும் உரைக்கப்பட்டது.

தமிழகத்தில் முன்பு 30 வகையான பனைமரங்கள் இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. இன்று "தாளிப்பனை, "கூந்தப்பனை', "நாட்டுப்பனை' ஆகியவையே உள்ளன. பனையில் ஆண்பனை, பெண்பனை என்ற இருவகை உண்டு. ஆண்பனை பூ மட்டுமே பூக்கும்; பெண்பனை காயும் காய்க்கும். "பனம்பூவில் இதழ் இல்லை, மென்மையும் இல்லை. இது குட்டையான, தடித்த சிறு முருங்கைக்காய் போல் இருக்கும். இந்தப் பூவைக் கருக்கிப் பந்து போலாக்கி கார்த்திகை மாதத்தில் "மாவளி' சுற்றுவார்கள். அதிலிருந்து தீப்பொறிகள் பறக்கும். அவை ஒளி வீசும் மின்மினிப் பூச்சிகள் போன்று அழகாகக் காட்சி தரும்" என பனைமரம் பற்றியக் கட்டுரை ஒன்று குறிப்பிடுகின்றது.

2. தமிழ் இலக்கியங்களின் அரண்

தமிழர்களின் எழுத்து மரபுக்கு என்று தனித்த வரலாறு உண்டு. அது பனை தந்த விழுதுகளால் வேர்விடத் தொடங்கியது. பனை ஓலைகள் தமிழர் வரலாற்றைத் தாங்கி

நின்ற அரண்கள். ஆதித் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஏடுகள் பனை மர ஓலைகளே. சங்க கால மக்களின் மரபார்ந்த அறிவுச் செழுமையைச் சமகாலத்திற்கு கைமாற்றிய ஊடகமாக பனைமரங்கள் விளங்குகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பனை ஓலை முக்கிய இடம் பெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியங்களை பனை ஓலைச் சுவடிகளே காப்பாற்றி வந்தன. பனை ஓலைகள் இல்லாதிருந்தால் தொடக்ககாலத்தில் புழக்கத்தில் இருந்த தமிழ் இலக்கண, இலக்கியங்கள் யாவும் புலவர்களின் நாவிலே தவழ்ந்து காற்றோடு கலந்திருக்கும். தமிழகத்தில் தாள் (பேப்பர்) அறிமுகமாகும் காலம் வரை பனை ஓலையே ஆட்சி செய்து வந்தது. இந்தப் பனை ஓலை நூறு ஆண்டு வரை அழியாமல் இருக்கும்.

பனை மரத்திலிருந்து எடுக்கப்பட்ட ஓலைகளே இலக்கியங்களைப் பதிவேற்றுவதற்கான ஆவணங்களாக இருந்து வந்துள்ளன. பனை ஓலைகளில் நேரடியாக அப்படியே எழுதி விட முடியாது. எழுதுவதற்கு ஏற்ப ஓலைகளைப் பதப்படுத்தும் தொழில் நுட்பத்தினையும் தமிழர்கள் அறிந்திருந்தனர். ஓலைகளை எழுத்தாணி கொண்டு எழுதுவதற்கு ஏற்றாற்போன்று தயார்ப்படுத்துவதற்கு "ஏடு பதப்படுத்துதல்' என்று பெயர்.

இவ்வாறு பனை ஓலைகளில் இயற்றப்பட்ட இலக்கியங்களில் பல சிதிலம் அடைந்து அழிந்தது போக மீதமுள்ள இலக்கியங்களே நூலாக வடிவம் பெற்று தமிழ்மொழியைச் செம்மொழியாக உயர்த்தி நிற்கின்றன. ஆகையால் பனைமரத்தை இலக்கியங்களின் அரண் என்றும் கருவூலம் என்றும் அழைக்கலாம்.

3. சேரனின் அடையாளப் பூ

சேரர், பாண்டியர், சோழர் ஆகிய மூவேந்தர்களுக்கும் தனித் தனியே அடையாள பூக்கள் இருந்ததை,

வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்

போந்தை வேம்பே ஆர்என வரூஉம்

மாபெருந் தானையர் மலைந்த பூவும் (புறத்திணை இயல். 5)

என்று தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகின்றது. இதில் போந்தை (பனம் பூ) சேரனுக்கும் வேம்பு (வேப்பம்பூ) பாண்டியனுக்கும் ஆர் (ஆத்திப்பூ) சோழனுக்கும் அடையாள பூக்களாக இருந்தது பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவற்றைச் சூடியிருத்தல் அரசமரபு. போருக்குச் செல்லுங்கால் தனது அடையாளப் பூவாக்கிய ஆத்திப் பூவைச் சூடியிருந்ததை கீழ்க்காணும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்

கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்

நின்ன கண்ணியும் ஆர் மிடைந்தன்றே (புறநானூறு – 45 : 1-3)

வெட்சி முதலான போர் வினைகளுக்குரிய பூவினை மாலையாகச் சூடிப் போருக்குச் செல்லுதலைப் பற்றி வெட்சி முதலான திணைகளில் புறப்பொருள் வெண்பா மாலை கூறுகிறது.

போந்தை என்பது பனம் பூவைக் குறிக்கும். சேரனுக்குரிய அடையாளப் பூவான பனம்பூவைப் புகழ்வது போந்தை என்னும் துறை. புறப்பொருள் வெண்பா மாலை கொளு இதனை,

கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பில்

புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று (புறப்பொருள் வெண்பா மாலை – 240)

என்று விளக்குகிறது. பகைவேந்தரோடு நிகழ்த்தும் போரில் புலால்நாறும் வேலினையுடைய சேரன் சூடும் பூவைப் புகழ்தல் என்பது இதன்பொருள். இதற்குரிய வெண்பா பனம்பூவின் சிறப்பைப் புலப்படுத்துகிறது. போர்வரின் சேரன் தனக்குரிய கொல்லிமலையில் பூத்த செங்கழுநீரைச் சூடாமல் பனம்பூவைச் சூடுவான் என்று சிறப்பித்துக் கூறுகிறது. இதிலிருந்து பனம்பூ சேரனின் அடையாளப் பூ என்பது தெளிவாகின்றது.

4. பாரியின் குலச்சின்னம்

பனைமரம் வேளிருள் ஒருவரான பாரியின் குலச்சின்னம் என வீரயுக நாயகன் வேள் பாரி புதினத்தில் குறிப்பிடப்படுகின்றது. கபிலர் பறம்பு மலைக்குச் சென்று கொண்டிருக்கும் பொழுது நீலன் அவரை பனைமரத்தின் அடியில் அமரச் செய்து ஓய்வெடுக்கச் சொல்கின்றான். கபிலர் அதற்குக் காரணம் கேட்கையில், "பனைமரம் எங்களின் குலச்சின்னம்; மனிதனுக்கு மட்டுமல்ல, பறம்பு மலையின் எல்லா உயிர்களுக்கும் அது தெரியும். அதனிடம் ஒப்படைத்து விட்டுப் போனால் எந்த ஆபத்தும் வராது. அதனால்தான் பனை அடிவாரத்தில் உங்களை உட்கார வைத்தேன்" **(வீரயுக நாயகன் வேள் பாரி, ப-36)** எனக் குறிப்பிடுகின்றான். மேலும் பாரிக்குப் **'பனையன் மகன்'** என்ற பெயர் இருப்பதாகவும் கபிலரிடம் கூறுகின்றான். பாரியின் குலப்பாடல் பாரியைப் பனையன் மகன் எனக் குறிப்பிடுவதாகவும் எடுத்துரைக்கின்றார்.

பனையன் மகனே பனையன் மகனே

பல்லுயிர் ஓம்பும் பாரி வேளே

திணையின் அளவே பிறஉயிர் வாடினும்

துடித்துக் காக்கும் தொல்குடி வேந்தே (வீரயுக நாயகன் வேள் பாரி ப-38)

என வேள்பாரி புதினத்தில் பாரி 'பனையன் மகன்' என்று சிறப்பிக்கப்படுகின்றான். பறம்பு மலையில் உள்ள பனை மரங்கள் அத்துனையுமே அவர்களின் குலச் சின்னமாகக் கருதப்பட்டு வழிபாட்டிற்குரிய மரமாக இருந்ததை இப்புதினம் நமக்கு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு பனைமரம் பாரிக்குக் குலச்சின்னமாக இருந்ததை அறிய முடிகின்றது.

5. உணவுப் பயன்பாடு

பனங்கொட்டையை நிலத்தில் போட்ட பின்பு அதற்கு நீரூற்றி, பராமரித்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை. அது இயல்பாகவே முளைத்து மரமாகி மனிதர்களுக்கு எல்லா விதத்திலும் பயனை அளிக்கின்றது. உண்பதற்கு உணவாக பனங்கிழங்கு, நுங்கு, பதநீர், கருப்பட்டி போன்றவற்றைத் தருகின்றது

தலையோர் நுங்கின் தீம் சோறு மிசைய

இடையோர் பழத்தின் பைங்கனி மாந்த

கடையோர் விடுவாய்ப் பிசிரோடு சுடுகிழங்கு நுகர

நிலமலர் வையத்து வலமுறை வளைஇ (புறநானூறு – பா-225)

என புறநானூற்றுப் பாடல் நலங்கிள்ளியின் படைச்சிறப்பைச் சுட்டுவதற்குப் பனையின் உணவுகளை உவமையாக எடுத்தாள்வது இங்கே குறிப்பிடத்தக்கது. நலங்கிள்ளியின் முதற்படை வீரர்கள் பனையின் நுங்கினை சுவைப்பர்; இடையிலே செல்லும் படை வீரர்கள் பனையின் பழத்தை மாந்தி மகிழ்வர்; கடையிலே செல்லும் படை வீரர்கள் பனையின் கிழங்கினைச் சுட்டு உண்பர். அத்தகு பெரும் படை நலங்கிள்ளியின் படை என்று கூற விளைந்த புலவர் பனையின் உணவையும் இங்கே எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பிற்குரியது.

தமிழர்களின் உணவு பழக்கவழக்கங்களில் கள்ளிற்கு என்று எப்பொழுதும் தனிச்சிறப்பிடம் உண்டு. போரில் வெற்றி கொண்ட வீரர்களுக்கு அரசன் கள்ளைக் கொடுத்து மகிழ்வான் என்பதை விளக்குவதற்குத் தொல்காப்பியத்தில் உண்டாட்டு என்னும் ஒரு துறையே அமைக்கப்பட்டுள்ளது. போர் வெற்றியைச் சிறப்பிப்பதற்கு மட்டும் இன்றி கள் மகிழ்வின் உச்சமாகவும் களிப்பின் வெளிப்பாடாகவும் இலக்கியங்களில் சுட்டப்படுகின்றது.

பனம்பூத் தண்டைச் சீவி அதன் அடிப்புறத்தில் சிறிய பானையைத் தொங்கவிடுவார்கள். சீவப்பட்ட பாகத்திலிருந்து சாறு ஒழுகும் அந்தப் பானையின் உட்புறத்தில் சுண்ணாம்பு தடவி இருந்தால், அது பதநீராகும்; சுண்ணாம்பு தடவாமல் இருந்தால் அது பனங்கள் ஆகும்.

ஒவ்வொரு நிலத்திலும் கிடைக்கும் அந்தந்தப் பொருட்களைக் கொண்டு கள் சமைத்து உண்டதனைப் பல்வேறு இலக்கியங்கள் நமக்கு சான்று பகர்கின்றன. அதில் குறிப்பாக பனங்கள் என்பது அரசன் வெற்றி பெற்ற வீரர்களுக்கு அவர்களின் வெற்றியைச் சிறப்பிக்கும் விதமாக குடம்குடமாக கள்ளைக் கொடுத்து மகிழ்வான் என்ற நிலையிலேயே இடம் பெறுகின்றது. பட்டினப்பாலையில்,

மடல் தாழை மலர் மலைந்தும்

பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தியும்

புன்தலை இரும் பரதவர் (பட்டினப்பாலை – 88-90)

என்ற அடிகள் பரதவர்கள் கள்ளுண்டு களித்திருந்ததை எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் கள் எல்லோரும் பயன்படுத்தும் உணவுப்பொருளாக இருந்ததை அறிய முடிகின்றது.

6. மருத்துவப் பயன்பாடு

பனை மரத்தின் பல்வேறு உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுகின்றன. பனஞ்சாறு உடல் சூட்டைத் தணிக்கும். பனம்பழம் வயிற்றுப் புழுவைக் கொல்லும். பனங்கிழங்கு மஞ்சள் காமாலைக்கு மருந்து. பனை ஓலையைச் சுட்டுத் தேனில் குழைத்துக் உண்டால் விக்கல், வாந்தி நிற்கும். பனம் பூ நஞ்சை நீக்கும் பொருளாகப் பயன்பட்டதை வேள்பாரி புதினம் குறிப்பிடுகின்றது.

“பனம்பூ வெறும் அழகு அல்ல, ஆயுதம். அது ஆயுதம் மட்டுமல்ல; பேரழகு. இந்த மலைத்தொடர் எங்கும் அலைந்து திரிந்து வேலை செய்பவர்கள் பனம் பூவின் குருத்து ஒன்றை எப்போதும் தங்களின் இடுப்பில் சொருகி வைத்திருப்பார்கள். குட்டையில் தேங்கி கிடக்கும் நீரில் நஞ்சு ஏறி இருக்கும். அலைந்து திரிபவர்களுக்குத் தாகம் எடுத்தால் எந்த குட்டை நீரிலும் பனங்குருத்தைப் போட்டு சிறிது நேரம் கழித்து அந்த நீரை அருந்துவார்கள். எவ்வித நஞ்சும் தாக்காது; அது ஒரு நஞ்சுமுறி” என்று வேள்பாரி புதினம் குறிப்பிடுகின்றது.

பனை நுங்கு உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியை அளிக்கும் உணவாகும். இது உடல் வெப்பத்தைக் குறைக்க உதவுகிறது. நீரிழப்பைத் தடுத்து சிறுநீரக செயல்பாட்டைச் சீராக்குகிறது. கோடைக்காலத்தில் உடலின் நீர்ச்சத்தை சமநிலைப்படுத்த உதவுகிறது. வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் இருப்பதால் உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. பனங்கற்கண்டு மற்றும் கருப்பட்டி பாரம்பரிய மருத்துவத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இருமல் மற்றும் தொண்டை எரிச்சலைத் தணிக்க துணைபுரிகின்றன. செரிமானத்திற்கு உதவுவதாக நாட்டுப்புற மருத்துவத்தில் நம்பப்படுகிறது. இது தவிர தோல் சிவத்தல் மற்றும் தோல் பாதிப்பு போன்ற பல்வேறு பொதுவான பிரச்சனைகளைத் தடுக்கவும் குணப்படுத்தவும் பனைமரத்தின் உட்கூறுகள் உதவுகின்றன.

“Apart from the food applications, the Borassus flabellifer plant parts and products (like leaves, spadix, flower, seed, sprout, sap, palm sugar, etc.) have been extensively used for medicinal purposes. The Borassus flabellifer leaves, bark, and roots consist of various bio constituents capable of preventing/treating various common issues such as redness and skin damage in humans”.

என அறிவியல் வழியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

7. சூழலியல் காவலன்

பனைமரம் சூழலியல் முறையில் பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. இதன் வேர்கள் மண்ணை இறுக்கமாகப் பற்றிக் கொள்வதால் மண் அரிப்பைத் தடுக்கின்றன. குறிப்பாகக் கடற்கரைப் பகுதிகளில் காற்று மற்றும் நீரால் ஏற்படும் மண் அரிப்பைக் கட்டுப்படுத்த பனைமரங்கள் உதவுகின்றன. இதனால் நிலத்தின்

வளம் பாதுகாக்கப்படுகிறது. பனைமரத்தின் ஆழமான வேர் அமைப்பு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதோடு, மண்ணின் நிலைத்தன்மைக்கும் துணைபுரிகிறது. மேலும், பனைமரம் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய மரமாகும். அதிக நீர் தேவையின்றி நீண்ட காலம் வாழும் தன்மை கொண்டதால், காலநிலை மாற்றம் மற்றும் நீர்ப்பற்றாக்குறை நிலவும் காலங்களில் இது முக்கியமான சூழலியல் வளமாகத் திகழ்கிறது. காற்றிலுள்ள கரியமில வாயுவை உறிஞ்சி, ஆக்சிஜனை வெளியிடுவதன் மூலம் வளிமண்டலச் சமநிலையையும் பனைமரம் பாதுகாக்கிறது.

பனைமரம் பல்வேறு உயிரினங்களுக்கு வாழிடமாகவும் உணவிடமாகவும் அமைகிறது. பனங்கிளி, பனங்காடை ஆகிய பறவைகள், பூச்சிகள், சிறு உயிரினங்கள் போன்ற பல உயிரினங்கள் பனைமரத்தைச் சார்ந்து வாழ்கின்றன. இதனால் உயிரினப் பன்மை பாதுகாக்கப்படுகிறது. ஒரு பனைமரம் அழிக்கப்படும்போது, அது ஒரு மரத்தின் அழிவாக மட்டும் இல்லாமல், அதனைச் சார்ந்த பல உயிரினங்களின் வாழ்விட அழிவாகவும் அமைகிறது.

“Palmyra palm as one of the most valuable tree species in tropical regions. Their review highlighted its ecological importance, medicinal value, nutritional benefits, and contribution to rural development. The authors noted that every part of the tree is useful, making it an excellent example of a zero-waste natural resource. They also emphasized its ability to survive drought conditions and contribute to sustainable livelihoods”.

என்று பனைமரம் குறித்து எழுதப்பட்ட அறிவியல் கட்டுரைகளும் மேற்கூறிய கூற்றை மெய்ப்பிக்கின்றன.

8. தொகுப்புரை

பனைமரம் தமிழர்களின் பண்பாட்டோடும் வாழ்வியலோடும் இயற்கைச் சூழலோடும் நெருங்கிய தொடர்புடைய மரமாகும். அதனாலே இம்மரம் ‘கற்பகத்தரு’ என்று அழைக்கப்படுகின்றது. பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் மனித வாழ்க்கைக்குப் பயன்படுவதோடு, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. வறட்சி, காலநிலை மாற்றம், நிலச்சரிவு, மண் அரிப்பு போன்ற சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள உதவும் இயற்கை வளமாக பனைமரம் விளங்குகிறது. இம்மரம் உணவு, பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றில் மட்டுமல்லாமல், மருத்துவத் துறையிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. சித்த மருத்துவம், ஆயுர்வேதம் மற்றும் நாட்டுப்புற மருத்துவத்தில் பனைமரத்தின் வேர், இலை, பூ, பதநீர், நுங்கு, பழம் மற்றும் பனங்கற்கண்டு போன்ற பகுதிகள் பல்வேறு நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே பனைமரம் சூழலியல் பாதுகாப்பின் இயற்கைக் காவலன் என்று சிறப்பிக்கப்படுகின்றது.

உசாவியவை

References

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.

பட்டினப்பாலை மூலமும் உரையும் இரா. ராகவ ஐயங்கார், அண்ணாமலை நகர், 1951

புறநானூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.

புறப்பொருள் வெண்பாமாலை, திருஞானசம்பந்தர் உரை, கதிர் பதிப்பகம், தஞ்சாவூர்.

வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், விகடன் பிரசுரம், சென்னை.

Ganesan, V., Sri Nandha Guru, M., & Vivekanandhan, S. (2025). Valorization of Borassus flabellifer plant biomasses and their bio-products for advanced materials: A review on research accomplishments and emerging avenues. Materials Chemistry and Physics: Sustainability and Energy

Krishnaveni, T. R. S., Arunachalam, R., Chandrakumar, M., Parthasarathi, G., & Nisha, R. (2020). Potential Review on Palmyra (Borassus flabellifer L.). Advances in Research, 21(9), 29–40

https://keetru.com/.